பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆனி 15உ (29—6—67) வியாழன் ★ வெளியூர்: ஆனி 16உ (30—6—67) வெள்ளி [இதழ்: 13

பசி நிரம்பிய கண்களுடன்!

"ஆண்டு அனுபவித்த காங்கிரசுப் புலி, இப்போது பசி நிரம்பிய கண்களுடன் கூட்டணி ஆட்சி புரியும் கேரளம், வங்காளம் ஆகிய மாநிலங்களை உற்று நோக்கிக்கொண்டிருக்கிறது! புதரில் பதுங்கியிருக்கும் அது, 'எப்போது பாயலாம்' என்று காத்திருக்கிறது; எனவே, கூட்டணி அரசுகள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்!"

—அறிஞர் அண்ணா
(தொழிலாளர் வரவேற்பில்)

தமிழகத்தில் சர்க்கரை வெட்டு ஏன்?

சட்டமன்றத்தில் சரமாரியான கேள்விகள்

மாநில அரசின் நிலைமை குறித்து அமைச்சர் மதியழகன் விளக்கம்

சென்னை, ஜூன் 29—

தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள சர்க்கரைத் தட்டுப்பாடு குறித்து, இன்று சட்டமன்றத்தில் கேட்கப்பட்ட சரமாரியான கேள்விகட்கு, உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் பதிலளிக்கையில், தமிழகத்தின் சர்க்கரைத் தேவையை அரசு உணர்ந்துள்ளதாகவும், இத்துறையில் மாநில அரசு எதுவும் செய்வதற்கில்லை என்றும், போதுமான சர்க்கரை ஒதுக்குமாறு மத்திய அரசிடம் வற்புறுத்தியிருப்பதாகவும் விளக்கமளித்தார்.

"சர்க்கரைப் பங்கீட்டை எடுத்துவிடும் எண்ணம் அரசின் ஆய்வில் இல்லை"

என்று திரு. வி. சுவாமிநாதன் கேள்விக்கு அமைச்சர் பதிலளித்தார்.

கே. விநாயகம்:— "உபரியாக இந்த மாநிலத்தில் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டும் தேவையான சர்க்கரை மக்களுக்குக் கிடைக்காத நிலை இருப்பதால் போதிய சர்க்கரை கிடைக்க இந்த அரசு உத்தரவாதமளிக்குமா?"

ப:—"உத்தரவாதமளிக்கவோ, உத்திரவிடவோ இந்த அரசினுல் இயலாது. கனம் அங்கத்தினரோடு சேர்ந்து பரிதாபப்படும் நிலையில்தான் இருக்கிறேம். இந்த மாநிலத்தில் கரும்பு விளைகிறது—சர்க்கரையும் உற்பத்தியாகிறது. ஆனல் எந்தெந்த மாநிலத்துக்கு எவ்வளவு சர்க்கரை என்பதை ஒதுக்கும் அதிகாரம் டில்லியிடம்தான் இருக்கிறது."

"முன்பு நமது மாநிலத்துக்கு 16,500 டன் சர்க்கரை ஒதுக்கப்பட்டது; அதன் பிறகு 11,500 டன்னுகக் குறைத்தார்கள்; இப்போது அதையும் 9000 டன்னுகக் குறைத்திருக்கிருர்கள்.

"இதுபற்றி நேற்று மத்திய உணவமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் அவர்களை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தபோது வற்புறுத்தினேன்; இப்பொழுது கிடைக்கும் சர்க்கரை போதுமானதாக இல்லை என்பதையும் மேலும் கூடுதலாக ஒதுக்க வேண்டும் என்பதையும், திருமண காலம் வருகிறது—அதற்குக் கூடுதலான சர்க்கரை தேவைப்படும்- திருமண காலத்துக்காவது அதிக சர்க்கரை ஒதுக்கவேண்டும்—என்பதையும் எடுத்துச் சொன்னேன்; அவர்களும் கவனிப்பதாகச் சொன்னுர்கள்.

"இப்போது இந்தியாவிலேயே மொத்தத்தில் மூன்றில் ஒரு பங்கு கரும்பு விளைச்சலில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாகவும், அதன் காரணமாகவே, சர்க்கரை அளவு குறைக்கப்படுவதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது."

கேள்வி:— "கற்கண்டு செய்வதற்காக முந்திய அரசு பலருக்கு சர்க்கரை கோட்டா வழங்கியுள்ளது; அதைக் குறைத்து, சர்க்கரை எல்லோருக்கும் கிடைக்க வகை செய்யப்படுமா?"

பதில்:—"கற்கண்டு தயாரிப்பதைக் குறைத்துக்கொள்ளுமாறும் இந்த அரசு அறிவித்துள்ளது. மேலும், சர்க்கரை விநியோக முறையை ஆழ்ந்து பரிசீலித்து, கள்ளச்சந்தை ஏற்படாமல் சீரான விநியோக முறை ஏற்படவும் ஆவன செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளும்."

கருத்திருமனுக்கு கருணாநிதி பதில்

கருத்திருமன்:—"கரும்பு போதிய அளவு விளையவில்லை என்று ஒரு புறம் சொல்லப்படும்போது, நமது மராமத்து அமைச்சர், 'கரும்பு பயிரிட்டால் தண்ணீர் விடமாட்டேன்' என்று கூறியது பொருந்துமா?"

அமைச்சர் மு. கருணாநிதி:— "கனம் எதிர்க் கட்சித் தலைவர், நான் கூறிய ஒரு வாசகத்தின் தலையையும் வாலையும் வெட்டிவிட்டு இப்படிக் கூறுவது நல்லதல்ல. நெல் விளைச்சலுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையிலும், அரசினர் கொள்முதல் செய்வதற்கு எதிராகவும் சில காங்கிரசுத் தலைவர்கள் பேசி, 'ஆகவே, நெல் பயிரிடும் நிலங்களில் கரும்பு போடுங்கள்' என்று கூறிப் பிரசாரம் செய்தனர். விவசாயிகளை அப்படித் தூண்டிவிடும் வகையில் பேசியதால் அதற்குப் பதிலளிக்கும் வகையில் நான், 'நெல் பயிரிடும் நிலத்தில் கரும்பு பயிரிட முனைந்தால் அதற்குத் தண்ணீர் தருவது மறுக்கப்படும்' என்ற கருத்தில் பேசினேன். இப்போதும் அந்த நிலையில்தான் இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்."

சி. வி. எம். அண்ணுமலை:— "எதற்கெடுத்தாலும் மத்திய அரசை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் நிலையைத் தவிர்த்து, நமக்குள்ள வசதிகளை நாமே பயன்படுத்திக் கொள்ளத்தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?"

அமைச்சர் மதியழகன்:—"ஆந்திர அரசு அரிசி வழங்குவதில அனுபவிக்கும் உரிமைபோல் நாமும் இங்கே அத்தகைய உரிமைகளை ஏன் அனுபவிக்கக் கூடாது என்ற கருத்தில் கேட்கிருர். மத்திய அரசின் அதிகாரத்துக்குட்பட்ட பிரச்சினைகளில் நாம் மத்திய அரசிடம் கேட்டுத்தான் செய்யவேண்டியுள்ளது."

மா. இராசாங்கம்:—"மத்திய அரசு நமது கோட்டாவைக் கூட்டினுலொழிய நெருக்கடியைச் சமாளிக்க முடியாது என்பதை அரசு அறியுமா?"

அமைச்சர்:—"இந்த அரசு மட்டுமல்ல; நாட்டிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் இருக்கின்ற ஒவ்வொருவரும் அறிவார்கள்."

சங்கரையா:—"வெளிநாட்டுக்கு சர்க்கரை ஏற்றுமதி செய்யப்படுவதால்தான், உள்நாட்டில் சர்க்கரை தட்டுப்பாடு ஏற்படுகிறது; இதனை நிறுத்த ஆவன செய்யப்படுமா?"

அமைச்சர்:—"வெளிநாட்டு ஏற்றுமதியைக்கூட இவ்வாண்டு நிறுத்திவிடுவது பற்றி மத்திய அரசு ஆலோசிப்பதாகக் கூறப்பட்டுள்ளது. ஏற்றுமதி மட்டுமல்லாமல் இவ்வாண்டு மூன்றில் ஒரு பங்கு கரும்பு விளையவில்லை என்பதாலும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனச் சொல்லப்படுகிறது."

என். வீராசாமி:—"சில கடைக்காரர்கள், இந்த அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்தவேண்டும் என்ற அரசியல் நோக்கத்துடன், சர்க்கரை விலை கிலோ 4-ரூபாய் என்று சொல்லித் தவருன பிரசாரம் செய்துவருவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?"

அமைச்சர்:—"சர்க்கரை விநியோகத்தில் கள்ளச்சந்தை ஏற்படாதவாறு தவருன நடைமுறைகளைத் தடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்."

அமைச்சர் மேலும் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், கட்டுப்பாட்டை ரத்து செய்ய இந்த அரசு விரும்பவில்லை என்றும், ரத்து செய்தால் அதனுல் ஏற்படும் புதிய விளைவுகளில் சிக்கிக்கொள்ள நேரிடும் என்றும் மத்திய அமைச்சரிடம் திட்டவட்டமாக அறிவித்துவிட்டதாகவும் கூறினுர்.

"சர்க்கரைப் பற்றிய சுவையான இந்தப் பிரச்சினையை விவாதிக்கத் தனியாக அரை மணி நேரம் ஒதுக்கவேண்டும்" என்று திரு. கே. விநயகம் கோரினுர்.

இந்தக் கேள்வி ஒன்றுக்கே 25 நிமிடம் ஒதுக்கிவிட்டதாகவும், மேலும் அரை மணி நேரம் ஒதுக்க இயலாது என்றும் கூறி அவைத் தலைவர் ஆதித்தனுர், விநயகத்தின் கோரிக்கையை ஏற்க மறுத்தார்.

நோக்கம் நிறைவேறவில்லை!

நன்மைக்குப் பதில் தீமையே அதிகம்!

தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம்---அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, ஜூன் 28—

"பொற்கொல்லர்களுக்குத் தீமையை ஏற்படுத்தியது மத்திய அரசின் சட்டம்; அந்தத் தீமையிலிருந்து அவர்களைக் காப்பது மாநில அரசின் பொறுப்பாகும்"

என்று, தொழிலமைச்சர் இரா. நெடுஞ்செழியன் சட்டமன்ற மேலவையில் கூறினுர்.

"தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம் முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டும்" என்று மத்திய அரசைக் கோரும் தனியார் தீர்மானத்தை, இராமகிருஷ்ண ஆச்சாரி என்பவர் கொண்டுவந்தார்.

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் மேலும் கூறியதாவது:—

"தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம் அறவே நீக்கப்பட வேண்டும் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. இந்தச் சட்டத்தினுல் நன்மைக்குப் பதில் தீமையே அதிகம் ஏற்பட்டது.

இந்தச் சட்டத்தின் அடிப்படை நோக்கம் நிறைவேறவில்லை என்பது, அச்சட்டம் வந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்ச்சிகள் புலப்படுத்தின. சமுதாயத்தில் இந்தச் சட்டத்தினுல் குழப்பம் ஏற்பட்டது!

சட்டத்தைக் கொண்டுவந்த மத்திய அமைச்சர் மொரார்ஜி தேசாய் மனமாற்றம் பெற்றிருக்கிருர். மத்திய அரசு கொண்டுவந்த சட்டத்தால் ஏற்பட்ட தீமைகளைக் காப்பது மாநில அரசுகளின் பொறுப்பாக ஆகிவிட்டது.

இதற்காக மத்திய அரசு அளித்த உதவித் தொகை ரூ. 230 இலட்சம் மாநில அரசின் பேரில் பற்று எழுதப்பட்டுள்ளது. 22,656 பொற்கொல்லர்கள் மீண்டும் தொழில் செய்வதற்கான சான்றிதழ் பெற்றிருக்கின்றனர். 1,309 பேர் வேறு தொழில்களில் அமர்த்தப்பட்டுள்ளனர். 309 பேருக்கு நிலம் வழங்கப்பட்டது. 4,000 பொற்கொல்லர்களின் மனுக்கள் பரிசீலனையில் இருக்கின்றன.

மத்திய அரசு கடனுகக் கொடுத்திருக்கும் தொகையை மானியமாகக் கருதவேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுள்ளோம்.

மத்திய அரசு, பொற்கொல்லர் நிவாரணத்திற்கு அளித்த தொகையை மானியமாகக் கருதினுல், இந்தக் கடனை மத்திய அரசு தள்ளுபடி செய்யமுடியும்."

இராமகிருஷ்ண ஆச்சாரி தமது தீர்மானத்தை வலியுறுத்தவில்லை.

உலகிலேயே அரிதான புதிய கனிப்பொருள்!

திருப்பத்தூர் அருகே கண்டுபிடிப்பு

சென்னை, ஜூன் 29—

வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் அருகில், 'வேர்மிகு லைட்' என்னும் ஒருவித அப்ரகப் படிவங்கள் கிடைப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக, தமிழகச் சட்டமன்றத்தில், தொழிலமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அறிவித்தார்.

இது தொடர்பாக எழுந்த துணைக் கேள்விகட்கு அமைச்சர் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"இந்தக் கனிப்பொருள் விலைமதிக்க முடியாத அபூர்வமான ஒன்ருகும். இது உலகிலேயே மிகச் சில இடங்களில்தான் கிடைக்கிறது; குறிப்பாக தென்னுப்பிரிக்காவிலிருந்துதான் உலகின் மற்ற நாடுகளுக்கு இது ஏற்றுமதி செய்யப்படுகிறது.

"இந்தக் கனிப்பொருள், காற்று—மின்சாரம்—ஓசை முதலியவைகளை தடுத்து நிறுத்தக் கூடியதாகும். இது போதிய அளவு கிடைத்தால், அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம்.

"இப்போது, திருப்பத்தூர் அருகில் 36 ஏக்கர் நிலத்தில் 30 அடி ஆழத்தில் 1,50,000 டன் வரை வெட்டியெடுக்கப்பட்டிருக்கிறது. அங்கு ரூ. 4 இலட்சம் செலவில் ஒரு தொழிற்சாலை நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது."

கள்ளுக் கடைகளை குத்தகை எடுத்தவர்கள்

'காங்கிரசுக்காரர்களே' எனக் குற்றச்சாட்டு

திருவனந்தபுரம், ஜூன் 28 —

"புதிய கள்ளுக் கடைகளை ஏலம் எடுத்தவர்களில் 80 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர்கள் காங்கிரசுக்காரர்கள்தான்"

என்று கேரளச் சட்டமன்றத்தில் ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள், காங்கிரசாரின் கண்டனத்திற்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டனர்.

இந்தக் குற்றச்சாட்டு, காங்கிரசுத் தரப்பில் மறுக்கப்படவில்லை!

ஆனல், மதுவிலக்குச் சட்ட ரத்து மசோதாவை காங்கிரசார் எதிர்த்தனர்!

நம்நாடு

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ.

திருவள்ளுவராண்டு 1998 ஆனி 15 (29—6—67) வியாழன்

சிறந்த திட்டம்

(3)

நன்செயும் புன்செயும் அடிப்படை நிலத் தீர்வையை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையைப் பல ஆண்டுக்காலமாக எழுத்து மூலமாகவும், பேச்சு வாயிலாகவும் வற்புறுத்திவந்திருப்பதற்கிணங்க ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதும், அக்கொள்கையைச் செயல்படுத்த முனைந்திருக்கிறது—தி.மு.க. அரசு. இந்த வகையில், முதற்கண் புன்செய் நிலத்துக்கான அடிப்படை நில வரியை நீக்கிவிட்டிருக்கிறது.

இப்படி, புன்செய் நில வரியை நீக்கியிருப்பதைப் பாராட்டுகின்ற அதே நேரத்தில், 'நன்செய் அடிப்படை நில வரியை ஏன் நீக்கவில்லை' என்ற கேள்வியை எழுப்பி, அதற்காகத் தமிழக அரசைக் குறையும் கூறுகின்றனர்—காங்கிரசுத் தலைவர்கள். இவ்வாறு குறை கூறுவதனுல், புன்செய் வரியை நீக்கிய தமிழக அரசின் தாராளப் போக்கை, பொதுமக்களிடம் சிறிது படுத்திக் காட்டிவிடக்கூடும் என, அந்தக் காங்கிரசுத் தலைவர்கள் தீர்மானித்துக்கொண்டிருக்கின்றனர் என்றே நாம் கொள்ள வேண்டியவர்களாகிறேம். ஆனுல், காங்கிரசுத் தலைவர்கள் நினைத்துக்கொண்டிருப்பதுபோல், அறியாமை இருளில் மூழ்கிக் கிடப்பவர்கள் அல்லர்—பொதுமக்கள் !

புன்செய் நிலத்துக்கான அடிப்படை நில வரியை நீக்கிய இதே நேரத்தில், நன்செய் நில வரியை ஏன் நீக்க இயலவில்லை—அதற்கு எது குறுக்காக நிற்கிறது என்பதற்குரிய விளக்கத்தை, தமது நிதிநிலை அறிக்கையில் நமது முதலமைச்சர் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கின்றுர். அவ்விளக்கத்தை மேலெழுந்தவாரியாக ஒரே ஒரு முறை படித்தவர்கள்கூட, நன்செய் நில வரியை இப்பொழுதே ஏன் நீக்கவில்லை என்ற கேள்வியை எழுப்பமாட்டார்கள்.

நன்செய் நிலத்தின் மீது வசூலிக்கப்பட்டு வரக்கூடிய அடிப்படை நில வரியை நீக்கிவிட வேண்டுமானுல், அந்த நன்செய் நிலங்கள்மீது விதிக்கப்பட்டிருக்கின்ற தண்ணீர் வரியைப் பிரித்தெடுத்து விதித்தாக வேண்டும். இவ்வாறு தண்ணீர்த் தீர்வை மட்டுமே விதிப்பதற்கு, அதற்கெனத் தனிச் சட்டம் ஒன்றும் இயற்றியாக வேண்டும். இத்தகைய சட்ட முன்னேற்பாட்டைச் செய்யாமல், நன்செய் அடிப்படை நில வரியை உடனடியாக நீக்குவதற்கில்லை.

இதுபற்றி ஆராய்ந்து அறிவித்த, ஏற்கனவே பதவியிலிருந்த காங்கிரசுக் கட்சி, ஓர் ஆய்வாளரை நியமித்திருந்தது. இதைக் குறித்து, தமிழக முதலமைச்சர், தமது நிதிநிலை அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்றுர் :—

"புன்செய் நிலங்களுக்குரிய அடிப்படைத் தீர்வையையும், நன்செய் நில மொத்தத் தீர்வையில் அடங்கியுள்ள அடிப்படை நில வரியையும் எவ்வகைச் செவ்விய முறையில் நீக்கலாம் என்பதை ஆராயும்படியே சிறப்பு அலுவலர் கேட்கப்பட்டிருந்தார்."

நன்செய் நிலத்தின்மீது விதிக்கப்பட்டுள்ள மொத்தத் தீர்வையிலிருந்து அடிப்படை நிலத் தீர்வையைப் பிரிப்பது என்பது சிக்கல் நிரம்பியவையாகும். சிக்கல்கள் என்ன என்பதையும் அந்தச் சிறப்பு அலுவலர், தமது பரிந்துரையில் கோடிட்டுக் காட்டியிருக்கின்றுர்.

இந்த இனத்தில் சிறப்பு அலுவலர் கோடிட்டுக் காட்டியிருப்பதை அலட்சியப்படுத்துவதற்கில்லை—அலட்சிப்படுத்துவதும் கூடாது. சிறப்பு அலுவலரின் பரிந்துரையிலுள்ளவற்றை மேலும் நுணுகி ஆராய்ந்து நஞ்சை நிலங்களின் அடிப்படை நில வரியை நீக்குவதுதான் விரும்பத்தக்கதாகும். அம்முறையில் செயல்படுத்தத் துணிவதுதான் பொறுப்புள்ள அரசின் கடமையாகும்.

நன்செய் நிலங்களின் அடிப்படை நில வரியை நீக்குவதால் கழகத்துக்குரிய அக்கறை, காங்கிரசுக் கட்சிக்கு இருப்பதைவிடக் குறைவானதல்ல ; இத்துறையில் கழகத்துக்குரிய பற்றினைக் குறைத்துக்காட்ட காங்கிரசுக் கட்சி முயற்சித்திருப்பது விரும்பத்தக்கதல்ல என்பதுடன், வன்மையாகக் கண்டிக்கத்தக்கதுமாகும்.

நன்செய் அடிப்படை நில வரியை நீக்குவது பற்றி இன்றையத் தமிழக அரசு கொண்டிருக்கக்கூடிய முடிவான கருத்தையும், அதை உடனடியாக நிறைவேற்றுமைக்குரிய காரணத்தையும், அதை நிறைவேற்ற மேற்கொள்ளவிருக்கின்ற முறை பற்றியும், அரசின் சார்பில் முதலமைச்சர் அண்ணு அவர்கள் ஐயத்திற்றடமின்றி அறிவித்திருக்கின்றுர்கள். நன்செய் நிலங்களின் அடிப்படைத் தீர்வையை இப்பொழுதே நீக்காமையைத் தங்கள் அரசியல் முதலாக ஆக்கிக்கொண்டு, கழக அரசின்மீது சிறு நிலம் படைத்தவர்களை ஏவிவிடப் பார்க்கின்ற காங்கிரசுத் தலைவர்கள் நல்லறிவு பெறுவதற்காக, தமது அறிக்கையில் முதலமைச்சர் தந்துள்ள கருத்துரையை இங்கு அப்படியே தருகிறேம் :—

"புன்செய் நில அடிப்படைத் தீர்வையையும், நன்செய் நில மொத்தத் தீர்வையையும் அகற்றிவிட்டு, பாசன வசதிகளின் வகைப்பாட்டிற்கிணங்கத் தண்ணீர்த் திர்வை மட்டும் விதிப்பதற்குப் புதிய சட்டம் இயற்றுவதன் வாயிலாகவே, முந்தைய அரசின் நோக்கத்தை நிறைவேற்ற முடியும் என்று அவருடைய (சிறப்பு அலுவலர்) பரிவுரை சாற்றுகிறது.

"சிறப்பு அலுவலர் கருதியுள்ளபடி, தண்ணீர்த் தீர்வையை ஒழுங்குபடுத்தும்போது, சில பகுதிகளில் தற்போது நிலவிவரும் தண்ணீர்த் தீர்வை வீதங்களை உயர்த்தவேண்டி வரும். எனவே, இதனை விருப்புடனும் விரிவாகவும் பரிசிலனை செய்ய வேண்டியுள்ளது.

"ஆனுல் அதே சமயத்தில்—சிறப்பு அலுவலரின் அறிக்கைப்படி—தண்ணீர்த் திர்வை வீதங்களை ஒழுங்குபடுத்துவதற்கும், கூடவே சட்டமியற்றினுல் அல்லாது, நன்செய் நில மொத்தத் திர்வையைத் தள்ளுபடி செய்வதோ, அகற்றுவதோ இயலாதென்பது தெள்ளிதின் விளங்கும்."

இக்கருத்து, அனைவருக்கும் விளங்கத்தான் விளங்கும் ; ஆனுல், அரசியல் நோக்கத்தோடு பார்க்கின்றவர்களுக்கு இவ்வுண்மை எப்படிப் புலனுகும் ?

இப்படி, 'சட்டம் இயற்றவேண்டும்' என்ற சிக்கலைக் காட்டி, 'நன்செய் நிலத் தீர்வையை அகற்றக்கூடாது' என இன்றைய அரசு தீர்மானித்துக்கொண்டிருக்கிறதா என்றுல், அதுதான் இல்லை. இத்தீர்வை நீக்கம்பற்றி இன்றைய அரசின் முடிவு என்ன என்பதை, முதலமைச்சர், கீழ்வருமாறு திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றுர் ; அது, இது ;—

"நன்செய் நிலமெனப் பதிவாகியுள்ள நிலங்களைப் பொறுத்தமட்டில்—இதில் சிக்கல் மலிந்திருப்பதால்—இதனை நன்கு ஆராய்ந்து, எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாக ஓர் அறிக்கை அனுப்புவதற்காக வல்லுனர் குழு ஒன்றை அமைக்க அரசு கருதுகிறது. இது குறித்துச் சட்டப் பேரவை உறுப்பினர்களையும் கலந்து, இக்குழுவின் அறிக்கையை ஆராய்ந்த பின்னர் இறுதி முடிவுகள் எடுக்கவேண்டும் என்பதே அரசின் விருப்பமாகும்."

இத்துறையில், தமிழக அரசு கொண்டுள்ள கருத்தில் சனநாயக மணம் கமழ்வதை, காங்கிரசுக் கட்சியினரால் நுகரமுடியும்.

எனவே, நன்செய் நில வரியை இம்பொழுதே நீக்காமைக்காக, தமிழக அரசின்மீது குறைபட்டுக்கொள்ளுகின்ற தங்கள் குறைமதியைக் காங்கிரசுக் கட்சியினர் மாற்றிக்கொள்ளுவார்களாக !

—கா. க.

சின்ன விஷயம் --- குருடன் பார்த்த இராசபார்வை!

'வினைதீர்த்தான் கோயிலுக்குப் போயும் வினை தீரவில்லை' என்றுல், வேதனை இருக்காதா என்ன ?

அதுதான் குமுறி வெடிக்கிருர்—காங்கிரசுக்காரர் அர்ச்சுன் அரோரா !

"மத்திய அரசின் அமைச்சர்கள் இருவர் தொழிலதிபர் பிர்லாவின் கையாட்கள் ; பிர்லாவிடம் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தவர்கள்' என்று சொல்லவேண்டிய இடத்தில்—தம் கட்சிக் கூட்டத்தில்—தலைமை அமைச்சர், காங்கிரசுத் தலைவர் போன்ற சொல்லவேண்டியவர்களிடம்—முறைப்படி குற்றஞ் சாட்டினுர்.

பிர்லாக்களின் ஏகபோக ஆதிக்கம் பற்றி பாராளுமன்றம் விவாதித்துக் கொண்டிருந்த நேரத்தில், தம் கட்சியின் கூட்டத்தில்தான் அர்ச்சுன் அரோரா இதைச் சொன்னுர்.

தம் வீட்டு விளக்கு என்பதாலேயே, அதை அவர் முத்த மிட்டுக்கொள்ளத் தயாராய் இல்லை !

ஆனுல், கட்சிக் கூட்டத்தில் அரோரா வைத்த பொறி, நாடாளுமன்றத்தில் பிடித்தது !

சப்த மேகங்களும் கூடி நெருப்பு மழை செய்தாற்போலே, நாடாளுமன்றம் சூடேறிய கதை நாடறிந்த ஒன்று.

அமைச்சர்கள் இருவரின் நாணயத்தைப் பற்றிய பிரச்சினை என்பதாலே, விடை வேண்டி ஒற்றைக்காலில் நின்றது நாடாளுமன்றம் ; அது இயற்கை.

ஆனுல் தலைமை அமைச்சர் இருக்கிருரே—அவர் ஏதோ பெரிய இராசதந்திரம் என்று நினைத்துக்கொண்டு, **மத்திய அமைச்சரவையில் ஒரு துணைக் குழுவை உருவாக்கி** சம்பந்தப்பட்ட அமைச்சர்களான சத்தியநாராயண சின்கா, கே.சி. பந்த் ஆகிய இருவர் பற்றிய புகாரை விசாரிக்கச் செய்தார்.

"அர்ச்சுன் அரோரா சுட்டிக் காட்டிய புகார்களுக்கு ஆதாரம் இல்லை" என்று அந்தத் துணைக் குழு கருதியதாம் ! 'அதோடு பிரச்சினையை முடியுங்கள்' என்று ஒரே போடாக போட்டார் தலைமையமைச்சர் !

தமிழகத்து டி. டி. கிருஷ்ணமாச்சாரி மீது வேறு ஏதோ சில புகார்கள் சொல்லப்பட்டபோது, அதுபற்றிக் கச்சை கட்டிக்கொண்டு நின்ற இந்திவாலாக்கள் — சத்தியநாராயண் சின்கா, கே. சி. பந்த் என்ற இந்திவாலாக்கள், பிரச்சினையில் வழுக்கிக் கொண்டார்கள் !

பிரச்சினை நிருபணமானுல், இந்திக்காரனை அல்லவா பாதிக்கும் ?

ஆனுல், அர்ச்சுன் அரோராவின் நல்ல உள்ளம் வேகிறது !

அவர், காற்றடித்த வேகத்தில் காங்கிரசில் வந்து ஒட்டிக்கொண்டவர் அல்லர் ! நெடுநாளைய காங்கிரசுக்காரர் ! சிறை சென்று தியாகம் செய்த புடம் போட்ட காங்கிரசுக்காரர் ! அவருக்குத் தனி மனிதர்களைவிட அமைப்பு பெரிதாகப்படுகிறது ! அதனுல்தான், இவ்வளவுக்குப் பிறகும் அவர் பிரச்சினையை விட்டுவிடுவதாக இல்லை !

கான்பூரில் காங்கிரசு ஊழியர் சங்கக் கூட்டத்தில் அமைச்சர்கள் சின்கா, பந்த்மீது தாம் சாட்டிய குற்றச்சாட்டுக்களைப் புது வலிவுடன் விளக்கி இருக்கிருர். எந்த இடத்திலும் தாம் அதை நிரூபிக்கத் தயார் என்று அறைகூவி இருக்கிருர் !

இவ்வளவு தூரம் அழுத்தமாகச் சொல்லியும், மத்திய அரசு அதை இலேசாகக் கருதுகிறது என்றுல், இதைப்போய் எங்கே சொல்வது ?

அர்ச்சுன் அரோராவைப் பொறுத்த வரையில், அவர், கட்சியின் தூய்மை கருதி இதனைச் சொல்கிருர் ; ஆனுல் அமைச்சர்களாகவும் இருப்பதால், அது, கட்சி கடந்து பொதுப் பிரச்சினை ஆகிறதே !

கட்சிக் கூட்டங்களில், அமைச்சர்களாக இருப்பவர்கள்மீது இப்படிக் குற்றஞ்சாட்டுவதை அனுமதிக்கக் கூடாது என்று விதி வகுப்பதிலேதான் அக்கறையாக இருக்கிருர்களே தவிர, உண்மையை மதிக்க மறுக்கிருர்கள் !

உலை வாயை மூடலாம் ; ஊர் வாயை மூட முடியுமா ?

நாட்டில் நடக்கிற அக்கிரமங்களை நாட்டு மக்களிடம்கூட அல்ல—தம் கட்சிக் கூட்டத்திலேயே கூட எடுத்துச் சொல்லக் கூடாது என்பதுதான் காங்கிரசின் சனநாயகம் ?

இந்த அழகில், குருடன் இராசபார்வை பார்த்த மாதிரி 'எங்களைப்போல் உண்டா ?' என்கிருர்கள் — காங்கிரசுக்காரர்கள் !

—பூரணன்

தூத்துக்குடித் திட்டத்துக்கு மத்திய அரசின் துரோகம்

அமைச்சர் நெடுஞ்செழியன் கண்டனம்

சென்னை, சூன் 27—

"வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாவதற்கும், இங்கிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும், தமிழகத்தின் தொழிற்சாலைகள் வளர்ச்சியுறுவதற்கும் தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டமும், சேது சமுத்திரத் திட்டமும் நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று, தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வலியுறுத்திக் கூறினுர்.

நாற்பது இலட்சம் ரூபாய்ச் செலவில் சென்னைத் துறைமுகக் குழுவால் நிறுவப்படும் புதுத் தொழிலகத்தின் முதல் கூடத்தை, தொழில் அமைச்சர் திறந்துவைத்தார்.

திரு. டி. கே. பழனியப்பன் ஐ.ஏ.எஸ். வரவேற்றுர்.

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் மேலும் தெரிவித்ததாவது :—

"தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டத்தைச் செயல்படுத்த முனையும்போது, கப்பல்கள் தங்குவதற்கு 17 இடங்களை உருவாக்குவது என்று தொடங்கி—அதைப் பன்னிரண்டாக்கி—பிறகு, 'ஐந்து இடங்கள் போதும்' என்ற முடிவுக்கு வந்தனர்.

இப்போது துறைமுகமாக்க வேண்டாம் ; மீன் பிடிக்கும் துறைமுகமாக ஆக்கினுல் போதும்' என்று கூறுகின்றனர்.

சேலம் மாவட்டத்திற்கு புதிய கல்லூரி

அடுத்த ஆண்டு ஏற்படலாம் !

சென்னை, சூன் 28—

"சேலம் மாவட்டத்தில் போதுமான கல்லூரிகள் இல்லாததால் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது ; அங்கு மற்றேர் அரசினர் கல்லூரி ஏற்படுத்தப்படுமா ? மகளிர் கல்லூரி ஏற்படுத்த ஆவன செய்யப்படுமா? எம்.ஏ., எம்.எஸ்சி. போன்ற பட்டப் பிற்கால வகுப்புக்கள் துவக்கும் உத்தேசம் உண்டா ?"

என்று சட்டமன்றத்தில், ஈ. ஆர். கிருஷ்ணன் கேட்டார்.

இதற்கு கல்வியமைச்சர் இரா நெடுஞ்செழியன் பதிலளித்ததாவது :—

"சேலம் மாவட்டத்தில் போதிய கல்லூரி இல்லை என்ற குறையை அரசு உணர்ந்துள்ளது ; அங்கு அதற்கான முயற்சிகளும் செய்யப்பட்டுவருகின்றன. இராசிபுரம் முதலிய இடங்களில் கல்லூரிக்கான முயற்சி நடைபெறுகிறது. இப்போதில்லையானுலும், அடுத்த ஆண்டு ஏற்படலாம்.

"பட்டப் பிற்கால வகுப்புத் துவக்குவது பல்கலைக் கழகத் துணைவேந்தரைப் பொறுத்ததாகும். அவருக்கு எழுதினுல் ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்."

'எதையும் எதிர்பார்த்துச் செய்வதல்ல 'தியாகம்'

'தியாக மானியத்துக்காக மொழிப் போரில் ஈடுபட்டவர்கள் எவருமில்லை'

'இது எனக்கிருக்கும் தனிப் பெருமையாகும்'-- சட்டமன்றத்தில் அண்ணா பெருமிதம்

சென்னை, ஜுன் 28—

"வீடில்லாத அரசியல் தியாகிகட்கு வீடு கட்டிக் கொடுக்கும் உத்தேசம் உண்டா?"

என்று, சட்டமன்றத்தில் வி. கே. கோதண்டராமன் கேட்டதற்கு, 'இல்லை' என்று விடையளித்தார்— சட்டத்துறை அமைச்சர் திரு: மாதவன்.

இதைத் தொடர்ந்து பல துணைக் கேள்விகள் எழுந்தன.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி:— "சில தியாகிகளுக்குக் கொடுக்கப்பட்ட நிலத்தை ஏற்கனவே விற்றுவிட்டார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இப்படி விற்பதைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?"

அமைச்சர் செ. மாதவன்:— "தியாகிகளுக்கு நிலம் கொடுக்கும்போதே சில நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன; யாராவது அந்த நிபந்தனைகளை மீறினால் அது பற்றிய தகவலை எழுதி அனுப்பினால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்."

கருத்திருமன்:— "தியாகிகளுக்குக் கொடுக்கப்பட்ட நிலத்தைப் பத்தாண்டுக்குப் பிறகு விற்கலாம் என்றிருக்கிறது. பத்தாண்டுக்குப் பிறகு விற்றவர் மீதுகூட நடவடிக்கை எடுக்கப்படுமா?"

அண்ணா:— "மாண்புமிகு அமைச்சர் தெரிவித்த பதிலில் இந்த நிபந்தனையும் அடங்கும்."

சீமைச்சாமி:— "கடமலைக்குண்டு வட்டாரத்தில் 100 ஏக்கர்கட்கு மேல் தியாகிகள் வசம் உள்ளன. அந்தப் புறம்போக்கு நிலத்தை அவர்கள் ஆக்கிரமித்துள்ளார்களா? அல்லது அரசே அவர்களுக்குக் கொடுத்துள்ளதா?"

அமைச்சர் மாதவன்:— "இது பற்றிய தகவல் இல்லை. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகள் கஷ்டப்படுவதாகக் கூறப்பட்டு, அவர்களுக்கு உதவுவதற்காக அரசு புறம்போக்கு நிலமும், உதவிப் பணமும், அளித்து வருகிறது. புறம்போக்கு நிலம் இருந்து, வீடு இல்லாதவர்கள் மனு போட்டால் கவனிக்கப்படும்"

புலவர் பொன்னம்பலம்:— "திருமயம் வட்டம் மேட்டுப்பட்டியைச் சேர்ந்த பெரியய்யா என்ற தியாகி மிகவும் ஏழ்மையில் துன்பப்படுகிறார். அவர் பல காலமாக மனுப் போட்டும் பலன் கிடைக்கவில்லை. அவருடைய கோரிக்கை கவனிக்கப்படுமா?"

அமைச்சர்:— "இது பற்றி எழுதியனுப்பினால் கவனிக்கப்படும்."

நாகசுந்தரம்:— "தியாகிகள் என்ற வரிசையில் யார் யார் உள்ளனர் என்ற பட்டியல் தரமுடியுமா?"

அமைச்சர்:— "விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்டு சிறை சென்ற தியாகிகள் யார் யார் என்ற பட்டியலை முந்திய அரசு தயார் செய்துள்ளது. விடுதலைப் போராட்டத்தில் தியாகம் செய்தவர்கள், யார் யார் இப்போது எந்தக் கட்சியில் இருந்தபோதிலும், அவர்களுக்கும் அந்தப் பட்டியலில் இடம் உண்டு; அவர்களுக்கும் உதவி அளிக்கப்படும்."

ஏ. வி. பி. ஆசைத்தம்பி:— "விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு மட்டும் உதவியளிப்பது கூடாது. விடுதலைப் போராட்டத்துக்குப் பின்னாலே நடந்த மொழிப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்கும் உதவியளிக்கத்தக்கவிதத்தில் பழைய அரசின் தியாகிகள் பட்டியலை மாற்றி, புதிய பட்டியலை இந்த அரசு உருவாக்குமா?"

அறிஞர் அண்ணா:— "உண்மையில் தியாகிகள் என்போர், இருந்ததை இழந்தவர்கள்—வர விருப்பதை, 'வேண்டாம்' என்பவர்களே ஆவர். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடாமல் இருந்திருப்பார்களேயானால், சொந்த வாழ்வில் பல வசதிகளைப் பெற்றிருப்பார்கள் என்று கருதித்தான், நலிவுற்ற தியாகிகளுக்கு உதவி செய்யப்படுகிறது. என்னைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்டவர்களுக்கு தியாகிகள் என்ற பெயர் பொருத்தமாக இல்லை என்றுதான் சொல்லுவேன். எதையும் எதிர்பாராமல் செயலாற்றுபவர்கள்தான், 'தியாகி' என்ற முழுப் பொருளுக்கு உரியவர்கள். வேறு பெயர் கிடைக்காததாலும், 'தியாகி' என்ற பெயர் பொதுமக்களிடையே அனுதாப உணர்ச்சியை ஏற்படுத்தும் என்பதாலும், அவர்களை, 'தியாகி' என்று அழைக்கிறார்கள் எனக் கருதுகிறேன். உண்மையில் அவர்களை விடுதலை வீரர்கள் (L berators) என்று கூறலாம்; அப்படிப்பட்ட விடுதலை வீரர்களுக்குப் பாராட்டுப் பதக்கம் அளித்திருக்கலாம்; அவர்களில் நலிவுற்றவர்களுக்கு மட்டும் வாழ்க்கை வசதி செய்து கொடுத்திருக்கலாம்.

"மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் தியாக மானியம் கொடுப்பது என்று ஆரம்பித்தால்—சனநாயகத்தில் ஒவ்வொரு ஐந்தாண்டும் ஒரு கட்சி ஆட்சியில் இருக்கும்போது எதிர்க் கட்சிகளாக இருக்கும் ஒவ்வொரு கட்சியும் நடத்தும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கெல்லாம் மானியம் வழங்க முனைந்தால்—ஒரு பதினைந்து ஆண்டுக்குள் கொடுப்பதற்கு நாட்டில் நிலமே இல்லாமற்போய்விடும். மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் யாரும், அந்த எண்ணத்தோடு ஈடுபடவில்லை என்பதுதான், 'நானும் அவர்களோடு இணைந்து போராடியவன்' என்ற முறையில் எனக்கு இருக்கும் தனிப் பெருமையாகும்."

ஏழைகளின் கண்ணீருக்கும் வரி போடுவர்!

காங்கிரசு சாம்ராஜ்யத்தைக் கட்டிக்காக்க டாட்டா--பிர்லாக்களிடம் சரணாகதி

நாடாளுமன்றத்தில் உடுமலை நாராயணன் கண்டனம்

"அரசாங்கச் சார்பில் மேற்கொள்ளும் பொதுத் துறை நிர்வாகம் அதிர்ச்சியூட்டக்கூடியதாக—தவறான வழியில் செல்லக்கூடியதாக—நோக்கத்திருந்து தவறக் கூடியதாகவே இருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் வெளியாகும் அறிக்கையும், பொதுத் துறையில் இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதைத்தான் வெளிப்படுத்துகிறது. அண்மையில் வெளியான அறிக்கையில், கடந்த ஆண்டு துர்க்காபூர் எஃகு உற்பத்தித் தொழிற்சாலையில் ஒரு கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற இழப்பு ஏற்படும்படியான நிலைமைக்குக் காரணம் காங்கிரசு அரசாங்கம்தான்"

என்று கழக உறுப்பினர் உடுமலை ப. நாராயணன், மக்களவையில் மத்திய அரசை வன்மையாகக் கடிந்துரைத்துப் பேசினார்.

மக்களவையில், மத்திய வரவு.செலவுத் திட்ட விவாதத்தின் போது உரையாற்றிய உடுமலை ப. நாராயணன், மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"காங்கிரசு சாம்ராஜ்யம்—காங்கிரசுக் கட்சி தொடர்ந்து பிழைத்து இருக்கவேண்டுமே என்பதற்காக, டாட்டா—பிர்லா—சாந்தி பிரசாத் ஜெயின்—இவர்களைப்போன்ற கூட்டத்தையே சார்ந்திருக்க வேண்டியதிருக்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்தில் நம்முடைய பொருளாதார வாழ்க்கையை அறுபது அல்லது எழுபது குடும்பங்களே கட்டுப்படுத்தி வருகின்றன!

இந்த நாட்டின் பொருளாதாரப் போக்கே அந்தக் குடும்பங்களிடம்தான் இருக்கிறது!

வரி விதிப்பு

எளிய மக்கள் பயன்படுத்தக்கூடிய தேயிலை— காபி — புகையிலை — அலுமினியம்—காலணி முதலிய பொருட்களுக்கு மத்திய அரசு வரி விதித்திருக்கிறது; ஆனால், மதுவகைகளுக்கு மட்டும் வரி விதிக்கவில்லை. மதுவகைகள் மீது போதுமான அளவு வரி விதிக்கப்பட்டுள்ளது என்று நிதியமைச்சர் கருதுகிறாரா?

தேயிலை, காபி, புகையிலைக்கு வரி விதித்திருப்பதற்குப் பதிலாக மதுவகைகளுக்கு நிதியமைச்சரின் இரும்புக் கரங்கள் வரி விதித்திருந்தால், நான், எனது இதயத்தின் அடித்தளத்திலிருந்து அவருக்கு நன்றியறிதலைத் தெரிவித்திருப்பேன்.

மத்திய அரசு வரி விதித்திருப்பதற்கு மாற்று மருந்து, மக்கள் கண்ணீர் விடுவதைத் தவிர வேறெதுவும் இல்லை.

அந்தக் கண்ணீர் அதிகரித்தால் கூட அதற்கும் நமது நிதியமைச்சர் வரி விதிப்பார்; இதில் வியப்படைவதற்கு ஒன்றும் இல்லை!"

மதுரையில் சட்டக் கல்லூரி ஏற்படுமா?

சென்னை, ஜுன் 28—

மதுரைப் பல்கலைக் கழகத்தோடு இணையும் சட்டக் கல்லூரி ஒன்றை மதுரையில் ஏற்படுத்தும் எண்ணம் எதுவும் அரசினர் பரிசீலனையில் இப்போது இல்லை என்றும், ஆனால், சட்டக் கல்லூரி ஒன்றை அங்கு ஏற்படுத்தவேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளதாகவும், மதுரை வழக்கறிஞர் சங்கக் கோரிக்கையும் வந்துள்ளதாகவும், சட்டக் கல்வியை மூன்றாண்டாக ஆக்குவது பற்றியும், சட்டக் கல்லூரியின் விதிமுறைகளையும் ஆராயக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், குழுவின் பரிசீலனை முடிந்ததும் அது பற்றி அரசு முடிவு செய்யும் என்றும் கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் இன்று சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

முழு உரிமை பெற்ற குடியரசுகளாக மாநிலங்கள்

'பிரிந்துபோகும் உரிமைபெற்று இயங்க வேண்டும்'

சோவியத் நாட்டுடன் ஒப்பிட்டு ஏ. எஸ். கே. அய்யங்கார் கருத்து

சென்னை, ஜுன் 26—

"தமிழகம் முழு உரிமை பெற்று குடியரசாகத் திகழ வேண்டும். அடுத்த பொதுத் தேர்தல் முழு உரிமை பெற்ற தமிழகக் குடியரசில்தான் நடைபெறும்"

என்று, கம்யூனிஸ்டு (வலது) கட்சியைச் சேர்ந்த ஏ. எஸ். கே. ஐயங்கார், ம. பொ. சிவஞானம் பிறந்தநாள் விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

"இந்தியா என்பது ஒரு நாடு அல்ல; இதைக் காங்கிரசார் ஒப்பமறுக்கின்றனர். பல தேசிய இனங்களைக் கொண்ட — பல மொழிகளைப் பேசுகின்ற மக்கள் வாழுகிற இந்த நாட்டின் மாநிலங்கள், சோவியத் நாட்டைப் போன்று தனி முழு உரிமை பெற்ற சுதந்திரக் குடியரசுகளாக மாறவேண்டும்.

அதிகாரங்கள், மத்தியில் குவிக்கப்பட்டிருக்கின்றன. மாநிலத்திற்கு முழு உரிமை வழங்கப்படவேண்டும்– விருப்பப்பட்டால் தனியாகப் பிரிந்து போகும் உரிமையும் வழங்கப்பட வேண்டும். அந்த உரிமையை வழங்காவிடில், காஷ்மீரத்துச் சிக்கலானாலும் வேறு எந்தச் சிக்கலானாலும் தீர்க்கமுடியாததாகிவிடும் என்பதை மத்திய அரசு உணரவேண்டும்.

காங்கிரசார் உணராததேன்?

தமிழகப் போக்குவரத்து என்று எழுதப் பெற்றிருப்பதைச் சிலர் எதிர்க்கின்றனர்; சிலர் கேலி செய்கின்றனர்.;

பட்டினியாகக்கூட மனிதன் சாவான்; ஆனால், மொழி உரிமையை-நாட்டு உரிமையை இழந்துவிடமாட்டான்.

மொழி உரிமை என்பது உணர்ச்சிபூர்வமானது — உள்ளச் சார்பானது என்பதைக் காங்கிரசார் உணர வேண்டும்.

மாநில உரிமைப் போராட்டமாக இருந்தாலும்—சேலம், தூத்துக்குடித் திட்டங்களுக்கான கிளர்ச்சிகளாக இருந்தாலும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி தி.மு. கழகத்துடன் தோளோடு தோள் நின்று தொண்டாற்றும்; ஒத்துழைப்புக் கொடுக்கும்.

இதுபோன்ற உரிமைப் போராட்டங்கள் பலவற்றை நடத்தித் தர திரு. ம. பொ. சி. பல்லாண்டு வாழவேண்டும். இதுபோன்ற விழாக்களில் கலந்து கொள்ள அவர் வாய்ப்புத் தர வேண்டும். எனக்குக் கடவுள்மீது நம்பிக்கை இல்லை. ஆகவே, பல்லாண்டு அவர் வாழவேண்டும்; பல உரிமைப் போராட்டங்களை நடத்தி உரிமையை மீட்டுத் தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்."

இலக்கிய வரலாற்றுத் துறையின் மாணிக்கம்

டாக்டர் இராசமாணிக்கனாருக்குப் புலவர்கள் புகழ்மாலை



"இலக்கிய வரலாற்றுத் துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் டாக்டர் இராசமாணிக்கனார் தலைசிறந்த மாணிக்கமாகத் திகழ்ந்தார்"

என்று சென்னை நக்கீரர் கழக—மறைமலையடிகளார் ஆய்வுக்குழுக் கூட்டத்தில் கருத்தறிவிக்கப்பட்டது.

சென்னை மத்திய நூலகக் கட்டிடத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

திரு. ந. சஞ்சீவி தலைமை வகித்தார்.

புலவர் தனக்கோடி வரவேற்றார். 'இராசமாணிக்கமும் இலக்கியமும் வரலாறும்' என்ற தலைப்பில் பேராசிரியர் க. த. திருநாவுக்கரசும், 'இராசமாணிக்கமும் கல்வெட்டும்' என்ற தலைப்பில் பேராசிரியர் பாலசுப்பிரமணியமும், 'இராசமாணிக்கமும் பண்பாடும்' என்ற தலைப்பில் ஔவை நடராசனும் ஆய்வுச் சொற்பொழிவாற்றினர்.

"டாக்டர் இராசமாணிக்கனாரைத் தொடர்ந்து இலக்கிய வரலாறு, கல்வெட்டு ஆகிய துறைகளில் ஏனைய தமிழ்ப் பேராசிரியர்கள் அப்பணிகளில் ஈடுபட்டுத் தமிழகத்திற்குப் புதுப் பொலிவினையும் அளிக்கவேண்டும்" என மறைமலை அடிகள் ஆய்வுக்குழு கேட்டுக்கொள்கிறது.

பல கல்லூரிகளிலிருந்தும் பேராசிரியர்கள், ஆராய்ச்சித் துறை அறிஞர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திரு. ஊ. செயராமன் நன்றி கூறினார்.

காங்கிரசிலிருந்து எம்.எல்.ஏ. விலகல்

கையூட்டு ஊழல் அம்பலம்

இலக்னோ, ஜுன் 27—

உத்தரப் பிரதேச சட்டமன்றக் காங்கிரசு உறுப்பினர் ஒருவர் நேற்றுக் காங்கிரசுக் கட்சியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

காங்கிரசுக் கட்சியில் கையூட்டு ஊழல் இருப்பதை எதிர்ப்பதன் பொருட்டு காங்கிரசிலிருந்து விலகுவதாக அவர் அறிவித்துள்ளார்.

‘சமூக விரோதச் செயல்களுக்குத் தமிழக அரசு இரையாகிவிடாது’

வரி ஏய்ப்புச் செய்ய எண்ணுவோருக்கு அமைச்சர் கே. ஏ. மதியழகன் முன்னறிவிப்பு

சென்னை, சூன் 28—

“சட்டப்படி அரசுக்குச் சேரவேண்டிய வரியை இந்த அரசு வசூலித்தே தீரும்; சமூக விரோதச் செயல்களுக்கு இந்த அரசு இரையாகிவிடாது; வரியை ஏய்த்துவிடலாம் என்று எவராவது நினைத்தால், பின்னர், அவர்களே ஏமாந்துவிடுவார்கள்!

“சட்டப்படி—நியாயப்படி அரசுக்குச் சேரவேண்டிய வரியை ஏமாற்றுபவர்களை இந்த அரசு விட்டுவிடாது—கருணை காட்டாது!”

இவ்வாறு வருவாய்த் துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன், சட்டமன்றத்தில் கூறினார்.

பொது விற்பனை வரி, ஏனைய வரி, தீர்வைகள்—நிர்வாகம் ஆகியவற்றுக்கு ரூ. 1,32,09,200-க்கான மானியக் கோரிக்கையை அமைச்சர் மதியழகன் பிரேரித்தார்.

மானியக் கோரிக்கைமீது கொண்டுவரப்பட்ட வெட்டுப் பிரேரணைகள்மீது விவாதம் நடைபெற்றது.

விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் அமைச்சர் மேலும் கூறியதாவது:—

“விற்பனை வரியை, ‘மக்களாட்சி வரி’ என்று சொல்லலாம். மக்களுக்காக மக்களிடம் வசூலிக்கப்படும் வரி இது. இதை, ‘சோஷலிச வரி’ என்றும் கூறுவேன்.

எந்த அளவுக்கு மக்களிடம் வாங்கும் சக்தி இருக்கிறதோ அந்த அளவுக்கு மக்களால் இந்த வரி கொடுக்கப்படுகிறது.

வணிகர்களின் நியாயமான சிரமங்களைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

அலுவலர்கள் அத்துமீறி நடப்பதையோ, தாறுமாருக நடப்பதையோ ஒருகாலும் அரசு ஒப்புக்கொள்ளாது.

ஆனல் அதே நேரத்தில், அரசுக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யவேண்டும். அந்தக் கடமையிலிருந்தும் நழுவிவிடக் கூடாது.

எங்கேயாவது அத்துமீறிய காரியங்கள் நடந்தால்—அதை அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்தால், அதன்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

பூசை அறையை நான் மதிக்கிறேன்; அதன் புனிதத்தன்மையை உணருகிறேன்.

‘புனிதமான இடம்’ என்று சொல்லும்போது, அந்த இடத்தில் கள்ளக் கணக்கைப் பதுக்கி வைக்கலாமா? சமுதாயத்தை ஏமாற்றுகிற காரியம் அங்கே நடக்கலாமா?

ஆயினும், பூசை அறையின் புனிதத்தன்மையில் நாங்கள் எவ்விதக் களங்கமும் ஏற்படுத்த மாட்டோம்.

அரசுக்குச் சேரவேண்டிய வரிப் பணத்தை வசூலித்து கஜானவில் செலுத்தாமல் இருக்கும் அதிகாரிகள்மீது கையாடல் வழக்குத் தொடரப்படுகிறது.

ஆனல், அரசுக்குச் சேரவேண்டிய வரியை வணிகர்கள் மக்களிடம் வசூலித்து வைத்துக்கொண்டு அரசுக்குச் செலுத்தாமல் இருந்தால் அது கையாடல் அல்லவா? அந்தச் செயல் பெரிய பாவம் அல்லவா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வணிகர்கள் தங்களுக்கெனச் சில ஒழுங்கு விதி முறைகளை வகுத்துக்கொள்ள வேண்டும்.

கேளிக்கை வரி ஏய்ப்பு பெரும் அளவில் நடைபெறுகிறது என்பதை மறுக்கமுடியாது. அந்த வரியை வசூலிக்க ஊராட்சி மன்றங்களும், நகரமன்றங்களும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.”

வழக்குப் பதிவு செய்வதில் ‘கோட்டா’ ஏற்பாடு இல்லை

சட்டமன்றத்தில் அண்ணா விளக்கம்

சென்னை, சூன் 28—

“காவல்துறை ஊழியர்கள் ஒரு மாதத்தில் அல்லது ஆறு மாதங்களில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை அளவுக்கு வழக்குகள் பதிவுசெய்ய வேண்டும் என்ற விதி எதுவும் இல்லை”

என்று திரு. என். வரதராசன் கேட்ட கேள்விக்கு முதலமைச்சர் அண்ணா அவர்கள் பதிலளித்தார்கள்.

“இப்படிப்பட்ட உத்தரவு நேரடியாகவோ மறைமுகமாகவோ, வாய்மூலமோ எழுத்து மூலமோ போடப்படவில்லை என்றும், காவல்துறையிலே இப்படிப்பட்ட கெட்ட பழக்கம் இருக்குமானல், பல கெட்ட பழக்கங்களை ஒழித்துக்கொண்டிருக்கும் இந்த அரசு இதனையும் ஒழித்துவிடும் என்றும் அண்ணா அவர்கள் திட்டவட்டமாக அறிவித்தார்கள்.

நமது உரிமையை மறுக்கிறது காங்கிரசு அரசு!

உரிமைக்கு போராடுகிறது கழக அரசு!

சென்னைக் கூட்டத்தில் ந. தர்மலிங்கம் பேச்சு

சென்னை, சூன் 27—

“தமிழகத்தில் இரட்டை ஆட்சி ஏற்பட்டுள்ளது; கழகத்தின் சார்பில் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் இங்கு ஆட்சி செய்யப்படுகிறது; காங்கிரசுக் கட்சியின் சார்பில் இந்திரா காந்தியின் தலைமையில் டில்லியிலிருந்து தமிழகம் ஆளப்படுகிறது; தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டம், சேலம் இரும்புத் தொழிற்சாலைத் திட்டம் நிறைவேற டில்லி அரசு மறுப்பதால், தமிழக அரசு—நாட்டின் நலனைக் கருதி, மத்திய அரசின் போக்கைக் கண்டிக்கிறது—உரிமைக்காகப் போராடுகிறது”

என்று திரு. ந. தர்மலிங்கம் எம்.எல்.ஏ., இன்று இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கூறினார்.

சென்னை 86-வது வட்டத்தில் கழகப் பொதுக்கூட்டம் தோழர் கே. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

தோழர் தருமலிங்கம் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“‘சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லை, சொல்லற்க சொல்லில் பயனிலாச் சொல்’ என்றார் வள்ளுவர். அவருடைய படம் சட்டமன்றத்தில் தொங்குகிறது; குறளும் எழுதப்பட்டிருக்கிறது; எனினும், காங்கிரசார் தவருன தகவல்களையே தருகிறார்கள்; பயன் ஏற்படாத வீண் குற்றச்சாட்டுகளைச் சுமத்துகிறார்கள்.

காலியான கஜானவை காங்கிரசார் நம்மிடம் ஒப்படைத்துச் சென்றது மட்டுமல்ல—கடன் பட்டியலையும் கொடுத்துவிட்டுச் சென்றார்கள்.

மக்களுக்கு வழங்க உணவுப் பொருள் இருப்பு வைத்துவிட்டுச் செல்லவில்லை காங்கிரசார்; கழகம் ஆட்சிக்கு வந்து கொள்முதல் செய்து மக்களுக்குக் குறைந்த விலையில்—சென்னையிலும் கோவையிலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுத்து வருகிறது.”

‘வேலூரில் படைப் பயிற்சிக் கல்லூரி நிறுவுக’

நாடாளுமன்றத்தில் ஜி. விசுவநாதன் கோரிக்கை

புதுடில்லி, சூன் 27—

“பாதுகாப்புக்குத் தேவையான கருவிகள் வாங்க ‘ஆர்டர்’ கொடுத்தபோது, ரூ. 98,600 என்று விலைப் பட்டியலில் குறிப்பிட்டிருந்ததை, ரூ. 98.60 என்று வாசித்துவிட்டு, இலண்டனில் இருந்த நமது பாதுகாப்புத் துறை உயர் அலுவலர் ஒருவர் ‘ஆர்டர்’ கொடுத்தார் என்றும் பிறகு விவரம் அறிந்த காலத்தில் அந்த ஆர்டர் கைவிடப்பட்டு அதனுல் பாதுகாப்புத் துறைக்கு இழப்பு ஏற்பட்டது என்றும் பாதுகாப்பு அமைச்சகத்தின் ஆண்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது; ‘இத்தாலிய ரூபாயில் பழக்கம் இல்லாததால் அந்தத் தவறும் அதனுல் இழப்பும் ஏற்பட்டது’ என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. இதுபோன்ற இழப்புகள் இல்லாதபடி அரசு பார்த்துக்கொள்ள வேண்டும்”

என்று மக்களவையில், கழக உறுப்பினர் ஜி. விசுவநாதன், பாதுகாப்புத்துறை மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்தின் போது பேசுகையில் சுட்டிக்காட்டிப் பேசினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

“சிக்கனத்தைக் கருதி, பாதுகாப்புத் துறையில் பணிபுரியும் தண்ணீர் தூக்கிவருபவர்கள்—சமையற்காரர்கள்—மற்றும் கடைநிலை ஊழியர்களை, ஆட்குறைப்புக் காரணமாக வேலை நீக்கம் செய்யக்கூடாது.

தமிழகத்தில் உள்ள வட ஆற்காடு மாவட்டத்தில் படைப் பயிற்சிப் பள்ளி ஏற்படுத்த வேண்டும். அங்கு அந்தப் பள்ளி ஏற்படுத்தப்படுவதால், எல்லாக் கிராமங்களைச் சேர்ந்தவர்களும் அந்தப் பள்ளியில் சேர்ந்து பயிலமுடியும்; இந்தியப் படையில் ஒவ்வொரு ஊரும் பிரதிநிதித்துவம் பெறமுடியும்.”

பம்பாய் தி. மு. க. தோழர்களுக்கு :

“பம்பாய் தி. மு. கழகத் தேர்தல் நிதிக் குழுக் கூட்டம், 2—7—67 காலை 10 மணியளவில், தாராவி திராவிடரகத்தில் நடைபெறும்; கிளைக் கழகச் செயலாளர்களும், தேர்தல் நிதிக் குழு உறுப்பினர்களும் இதனையே அழைப்பாகக் கருதி தவருமல் வருகைதர வேண்டுகின்றோம்”

என்று நிதிக் குழுச் செயலாளர்கள் எஸ். தியாகராசன், அ. சு. சண்முகவேலு அறிவிக்கின்றனர்.

வெ. கண்ணன் நிகழ்ச்சிகள்

சூலை 4 : சிவகிரி; 8 : சென்னை; 9 : சென்னை 94-வது வட்டம்; 15 : பழனி; 16 : சேலம்; 22 : கோவை 12-வது வட்டம்; 23 : அருப்புக்கோட்டை; 26 : கிருஷ்ணபுரம்.

‘வரி உயர்வால் எந்தப் பாதகமும் பஸ் முதலாளிகளுக்கு ஏற்படாது’

அமைச்சர் மு. கருணநிதி விளக்கம்

சென்னை, சூன் 28—

“மூன்று மாதங்களில் ரூ. 8,000 இலாபம் பெறும் பஸ் முதலாளிக்கு, இந்த வரி உயர்வு அதிகம் அல்ல; இந்த வரி உயர்வால் எந்தப் பாதகமும் ஏற்படாது”

என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் மு. கருணநிதி, சட்டமன்றத்தில், மோட்டார் வரிச் சட்டத்திருத்த மசோதாமீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

“சென்னை மோட்டார் வரி (திருத்த) மசோதாவை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்” என்று அமைச்சர் மு. கருணநிதி முன்மொழிந்தார்.

விவாதத்தில் இராம. அரங்கண்ணல், து. ப. அழகுமுத்து, கே. விநாயகம் (காங்), காசிநாதன் (காங்), கிருஷ்ணசாமி கவுண்டர் (சுத), பாலசுப்பிரமணியம் (இடதுகம்.), சுப்பராசு (சுயே), டாக்டர் ஹாண்டே (சுத), எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விவாதத்திற்குப் பதிலளிக்கையில் அமைச்சர் மு. கருணநிதி மேலும் குறிப்பிட்டதாவது:—

“மெல்ல மெல்ல, படிப்படியாக பஸ்களைத் தேசியமயமாக்குவோம். பஸ் பயணத் தொலைவை அதிகரித்திருப்பதால், வரி உயர்வால் தொல்லை ஏற்படாமல் வருமானம் உயரும்.

“இந்த ஆண்டு அரசுக்கு ஒரு கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும். அடுத்த ஆண்டு ஒன்றேகால் கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும்.”

மசோதாவின் விவரங்கள் தனித்தனியாக வாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

திரு. காசிராமன் கொண்டுவந்த திருத்தம் தோற்றது.

“மசோதா சட்டமாக நிறைவேற வேண்டும்” என்று அமைச்சர் மு. கருணநிதி முன்மொழிந்தார்.

எந்தக் கல்லூரியில் இடம் கிடைக்கும்?

பத்திரிகைகளின் வாயிலாக அறிய வாய்ப்பு

சென்னை, சூன் 28—

எங்கெந்தக் கல்லூரிகளில் எத்தனை இடங்கள் காலியாக உள்ளன என்பதைக் கண்டறிந்து, பத்திரிகைகள் வாயிலாகத் தெரிவிக்க ஏற்பாடு செய்யவிருப்பதாகவும், இப்படிச் செய்வதன் மூலம், வேறு கல்லூரியில் இடம் கிடைக்காத மாணவர்கள், இடம் இருக்கும் கல்லூரிகளில் சேர வாய்ப்பு ஏற்படும் என்றும் இன்று சட்டமன்றக் கேள்வி நேரத்தில் கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அறிவித்தார்.

கல்லூரிகளில் இட நெருக்கடி ஏற்படக் காரணம்?

கல்வியமைச்சர் விளக்கம்

சென்னை, சூன் 28—

இவ்வாண்டு இரண்டு புதிய பெண்கள் கல்லூரிகளை — ஒன்று செய்யாற்றிலும், மற்ருென்று மாயூரத்திலும் துவக்க அரசு முடிவு செய்திருப்பதாக இன்று சட்டமன்றத்தில் கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்.

“வேலூரில் பெண்கள் கல்லூரி ஏற்படுத்தும் உத்தேசம் தற்போது இல்லை” என்று மா. பா. சாரதியின் கேள்விக்குப் பதிலளித்தார்.

மற்றும் பல துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்ததாவது:—

“இவ்வாண்டு மொத்தம் 8 புதிய கல்லூரிகள்—தனியார் துறையில் 6-ம், அரசினரால் இரண்டும் துவக்கப்படவிருக்கின்றன.

சில குறிப்பிட்ட கல்லூரிகளிலேயே சேரவேண்டும் என்று பலரும் விரும்புவதாலேயே இட நெருக்கடிகள் ஏற்படுகின்றன.

மற்றும் பல கல்லூரிகளில் இடங்கள் காலியாக இருப்பதும் உண்டு.

இடம் இருக்கும் கல்லூரிகளில் சேர முயன்ருல் மொத்தத்தில் இட நெருக்கடியே ஏற்படாது.

தற்போது இட நெருக்கடியுள்ள கல்லூரிகளில் ‘ஷிப்டு’ வைக்கலாமா என்று பல்கலைக்கழகத் துணைவேந்தரையும் கேட்டிருக்கிறேன்; அவரும் பரிசீலிப்பதாகக் கூறியிருக்கிருர். எங்கெங்கோ கல்லூரி ஏற்படுத்தவேண்டும் என்று விரும்புகிருர்களோ, அங்கே அதற்கான பணத்தைத் திரட்டிக் கொடுத்து—நிபந்தனைகளை நிறைவேற்றி—தக்க சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுத்தால், அதன் பிறகு பல்கலைக்கழகத்தின் அனுமதி பெற்று கல்லூரி துவங்க அரசு ஆவன செய்யும்.

ஒரு கல்லூரி ஏற்படுத்த விரும்பினல், அவர்கள் பணமாகவோ நிலமாகவோ அல்லது கட்டிடங்களாகவோ ரூ. 5 இலட்சம் அளவுக்குத் தரவேண்டும்; அதன் பிறகு அரசு அதனை ஏற்று நடத்த ரூ. 20 இலட்சம் வரை செலவிட வேண்டியுள்ளது.”

நடக்க இருப்பவை

30–6–67

சென்னை 100-வது வட்டம்

நாவலர் படிப்பகத்தின் சார்பில் இரவு 7 மணிக்கு காரணீசுவரர் தேரடி திடலில்; தலைவர்: தேவராசன்; பேசுவோர்: அமைச்சர் கே. ஏ. மதியழகன், சி. சிட்டிபாபு எம்.பி., வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., எம்.கோபால் எம்.எல்.ஏ., ஆர். சடகோபன் எம்.சி., சைதை சம்பந்தம் எம்.சி., பவளவண்ணன் எம்.சி., ஆர். டி. பாஸ்கரன் எம்.சி.

குழுக் கூட்டம்

“1—7—67 இரவு 9 மணிக்கு, சென்னை 60-வது வட்டத் தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மாவட்டச் செயலாளர்—பகுதிச் செயலாளர் ஆகியோர் முன்னிலையில், ‘அன்பக’த்தில் நடைபெறும்; உறுப்பினர்கள் தவருமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்” என்று, வட்டச் செயலாளர் கே. எஸ். தங்கவேல் அறிவிக்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.